சுருக்கம்

கிராம நிருவாகம் – தமிழ்நாடு வருவாய்த்துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்களுக்கு தகுதி அடைப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பதவி உயர்வு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த் [பணி8(1)] துறை

அரசாணை (நிலை) எண்.570 நாள்:.26.12.2014

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.625 வருவாய்த் [பணி8(1)]துறை, நாள் 6.7.1995
2. அரசாணை (நிலை) எண்.645 வருவாய்த் [பணி8(1)]துறை, நாள் 29.11.2010
3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் 8.8.2014 ஆம் நாளிட்ட அறிவிப்பு
4. கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித ந.க.எண்.வநி2(2)/62497/2011 நாள் 30.8.2014

***

ஆணை:–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பகுதி நேர ஊழியர்களாகப் பணிபுரிந்து வந்த கிராம உதவியாளர்களை 1.6.1995 முதல் முழுநேர அரசுப் பணியாளர்களாக மாற்றியமைத்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கிராம உதவியாளர்களாக தொடர்ந்து பத்து ஆண்டுகள் பணி முடித்த நிலையில், தகுதியின் அடிப்படையில், அலுவலக உதவியாளர் பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களில் 10% மட்டும் பணிமாற்றம் (Recruitment by transfer) மூலம் பதவி உயர்வு வழங்கலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

2. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 8.8.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று மற்றும் பத்து வருடங்கள் கிராம உதவியாளராகப் பணிமுடித்த தற்போது தகுதியாக உள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர் பதவியில் காலியாக உள்ள பணியிடங்களில் 20 விழுக்காடு பதவி உயர்வு அளித்து நிரப்பப்படும்".

3. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் பத்து ஆண்டுகள் பணி முடித்து, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர்கள் பணியிடங்களில் ஏற்படும் காலி பணியிடங்களில் இருபது விழுக்காடு (20%) பணியிடங்களை பணிமாற்றம் மூலம் பதவி உயர்வு (Recruitment by transfer promotion) வழங்கி நிரப்பலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார். மேலும் அவ்வாறு கிராம நிருவாக அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்பிட தகுதியான கிராம உதவியாளர்கள் இல்லையெனில் அத்தகைய காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிடலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார்.

4. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்தது. பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று மற்றும் பத்து ஆண்டுகள் கிராம உதவியாளர்களாக பணி முடித்து தகுதியாக உள்ள கிராம உதவியாளர்களுக்கு கிராம நிருவாக அலுவலர் பணியிடங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களில் இருபது விழுக்காடு (20%) பதவி உயர்வு அளித்து நிரப்பலாம் என்றும், மேலும், அவ்வாறு கிராம நிருவாக அலுவலர் காலிப் பணியிடங்களை நிரப்பிட தகுதியான கிராம உதவியாளர்கள் இல்லையெனில் அத்தகைய காலிப்பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.3396/F.8(P)/2014 நாள் 5.9.2014 இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்

<u>பெறுநர்:</u>
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை—5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்,